# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.24347590

**ஆணை நாள் 03.11.2020**

**முன்னிலை**

**திரு.ச.செல்வராஜ்,எம்.ஏ.,பி.எட்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 9513/E/2019**

திரு.மு.வேல்முருகன் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர். .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

மேல்முறையீட்டாளர் 05.04.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் வெள்ளூர் கிராம அலுவலக அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், கிராம நிர்வாக அலுவலரின் முக்கிய பணிகள் மற்றும் கடமைகள் பற்றிய விபரம், வெள்ளூர் கிராம நிர்வாக அலுவலரின் பெயர், கல்வித் தகுதி, குடியிருக்கும் வீட்டு முகவரி மற்றும் அலுவலக தொலைபேசி எண், கிராம நிர்வாக அலுவலர்கள் வார நாட்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த அரசாணை, சுற்றறிக்கைகளின் நகல், தாங்கள் TNPSC Group IV தேர்வு எழுதிய ஆண்டு, பெற்ற மதிப்பெண்கள் மற்றும் நியமனம் பெற்ற ஆண்டு, சமர்ப்பித்த சான்றிதழ்களின் நகல் உள்ளிட்ட 28 இனங்கள் மற்றும் 10 உட்பிரிவுகளில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். தகவல் கிடைக்கப் பெறாததால் மேல்முறையீட்டாளர் 15.06.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான மனுவை விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கும் மற்றும் 20.09.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திலும் தாக்கல் செய்துள்ளார்.

2. அந்த மனு தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வரப்பெற்ற தேதியின் அடிப்படையில் காலவரிசை பட்டியலிடப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் விருதுநகர் மாவட்டத்தில் பல மாதங்கள் ஆகியும் முழுமையான தகவல் வழங்கப்படாத மேல்முறையீட்டாளர்களின் நிலுவை மனுக்களின் மீது

மாநில தகவல் ஆணையர் அவர்கள், விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களுடன் 29.09.2020 அன்று தொலைபேசி மூலம் விவாதிக்கப்பட்ட இருந்த நிலையில், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் 21.10.2020 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், சிவகாசி வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் 30.09.2020 தேதியிட்ட கடிதத்தில், மேல்முறையீட்டாளரை 07.10.2020 அன்று வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரில் வந்து ஆவணங்களை பார்வையிட்டு தேவையான தகவல்களை பெற்றுக் கொள்ளுமாறு பதிவஞ்சலில் கடிதம் அனுப்பியதாகவும், ஆனால் அவர் ஆஜராகவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளர் தனது 05.04.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவினை வெள்ளூர் கிராம நிர்வாக அலுவலரிடம் தாக்கல் செய்துள்ளது தகவல் பெறும் உரிமைச் சட்டத்திற்கு முரணானதாகும். வட்ட அளவில், வருவாய்த் துறைக்கு சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர் தான் பொதுத் தகவல் அலுவலர் என்பதும், வட்டாட்சியர் தான் முதல் மேல்முறையீட்டு அலுவலர் என்பதும் மேல்முறையீட்டாளருக்கு தெளிவுபடுத்தி, இனி வருங்காலங்களில் முறையாக மனு செய்திடவும் அறிவுறுத்தப்படுகிறது.

3. பொதுத் தகவல் அலுவலரின் கடிதத்தை பதிவு செய்தும், மேல்முறையீட்டாளருக்கு கூடுதலாக ஒரு வாய்ப்பளித்தும், விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது:-

*இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு மீண்டும் அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து,* ***வெள்ளூர் கிராம நிர்வாக அலுவலருடன் இணைந்து,*** *மேல்முறையீட்டாளர் 05.04.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்த மனுவில் கோரியுள்ள 28 இனங்கள் தொடர்பாக,* ***சட்டப்பிரிவுகள் 2(f) மற்றும் 8(i)(j)-களுக்கு உட்பட்டு,*** *தகவல்கள் அடங்கிய கோப்புகள், பதிவேடுகள், கணினி நடவடிக்கைகள், ஆவணங்கள் உள்ளிட்டவற்றை மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு சட்டப்பிரிவு 2(j)-ன்படி ஆஜர்படுத்தி, அவர் ஆய்வு செய்வதை வீடியோ அல்லது புகைப்படம் எடுத்து, ஆய்வு செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில் அதனை ஒளிநகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் (25 பக்கங்களுக்கு மிகாமல்) கட்டணமின்றி வழங்கி, அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தையும், ஆய்வு செய்த வீடியோ அடங்கிய CD அல்லது புகைப்படத்தை இணைத்து அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 21 தினங்களுக்குள் ஆணையத்திற்கு சமர்ப்பிக்குமாறு* ***சிவகாசி வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு*** *உத்தரவிட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து, இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகிறது.*

**ஒம்/-.ச.செல்வராஜ்,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 9513/E/2019**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்,
சிவகாசி, விருதுநகர் மாவட்டம்.

கிராம நிர்வாக அலுவலர்,
வெள்ளூர், விருதுநகர் மாவட்டம்
(பொதுத் தகவல் அலுவலர், சிவகாசி வட்டாட்சியர் அலுவலகம் மூலமாக)

பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
விருதுநகர்.

திரு.மு.வேல்முருகன், த/பெ.க.முத்தையா
5/1046, கிழக்குத் தெரு,
வெள்ளூர்-626 005,
விருதுநகர் மாவட்டம்.

Copy to: File
RJ/PS 03.11.2020